விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24

ஒலி 082 வள்ளுவர் ஆண்டு 2054 மாசி 27 சனிக்கிழமை (11.03.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

## கோரமின்மை காரணமாக முதல்வர் தெரிவு ஒத்திவைப்பு

### சபைக்கு வராமல் வெளியே நின்ற உறுப்பினர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் இடைக்கால முதல்வர் தெரிவுக் கூட்டம், கோரமின்மை காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தெரிவுக்கான புதிய திகதி விரைவில் அறிவிக்கப்படும் என்று குறிப்பிட்ட வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செ.பிரணவநாதன் கூட்டத்தை ஒத்திவைத்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் எஞ்சியுள்ள பதவிக் காலத்துக்குப் 11



அரசின் அடக்குமுறைக்கு எதிராக கொழும்பிலுள்ள ஐ.நா அலுவலகம் முன்பாக நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

## 110 கிலோ கஞ்சா மாதகலில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

மாதகல் - லூர்து மாதா தேவாலயத்திற்கு அருகில் நேற்றிரவு 110 கிலோ எடையுள்ள கேரளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

55 பொதிகளாக பொதியிடப்பட்ட இந்த கஞ்சா பொதிகள் மாதகல் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளது. எனினும் இது குறித்து சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. (ம-7,104)

# தேர்தலை நடத்த முழு ஒத்துழைப்பு

### தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் துறைசார் அதிகாரிகள் உறுதி

(கொழும்பு)

தேர்தலை தடையின்றி நடத்துவதற்கு தேவையான முழுமையான ஒத்துழைப்பு வழங்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் துறைசார் அதிகாரிகள் உறுதியளித்துள்ளனர்.

(11ஆம் பக்கம் பார்க்க)




## யாழில் 170 ரூபாயுக்கு பாண் விற்கப்படும்


(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் 170 ரூபாயுக்கு பாண் விற்கப்படும் என யாழ் மாவட்ட கூட்டுறவு வெதுப்பக உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கந்தசாமி குணரத்தினம் தெரிவித்தார்.

யாழில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு தெரிவித்தார். 11

## கீரிமலை ஆதிசிவன், சடையம்மா மடம், கதிரைவேலன் கோயிலை கட்ட அனுமதியுங்கள்

### செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன்



(யாழ்ப்பாணம்)

கீரிமலை ஆதிசிவன் கோயில், சடையம்மா மடம், கதிரைவேலன் கோயில் ஆகியவற்றின் நிலை என்ன என அகில இலங்கை இந்துமாமன்ற உப .தலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இலங்கை சைவமக்களின் மிகத் தொன்மை வாய்ந்த வரலாற்றிடம் கீரிமலை. இப்பகுதியில் கடல் மட்டத்திலிருந்து மிகவும் உயரமான மலை போன்ற ஒரு 11

## தெல்லிப்பழையில் ஆண் ஒருவர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் 8ஆம் கட்டை பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து 30 வயது ஆண் ஒருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,104)

## பொருளாதாரம் ஸ்திரமடைந்த பின்னரே தேர்தலை நடத்துவோம்

### சபையில் அமைச்சர் மனுஷ நாணயக்கார

(கொழும்பு)

பொருளாதாரம் ஸ்திரமடைந்ததன் பின்னரே எத் தேர்தலையும் நடத்துவோம். தற்போதைய நிலையில் தேர்தலை நடத்துவது ஜனநாயகம் அல்ல. அரசியலமைப்பு, சட்டம் ஆகியவற்றை காட்டிலும் நாட்டு மக்களின் உயிர்வாழும் உரிமைக்கு முன்னுரிமை வழங்குவோம் என வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற சர்வஜன வாக்குரிமை தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ம-7)


## வவுனியாவில் இளைஞன் வெட்டிப் படுகொலை

(வவுனியா)

வவுனியாவில் இளைஞன் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இதில் வவுனியா நித்திய நகர்ப் பகுதியைச் சேர்ந்த சக்திவேல் யசோதரன் (வயது-30) என்ற இளைஞனே படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா பூவரசங்குளம் மணியர்குளம் பகுதியில் நேற்று 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யா/இணுவில் மத்திய கல்லூரி

பாடசாலை அபிவிருத்தி நிறைவேற்றுக் குழு
வருடாந்தப் பொதுக்கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும்

காலம் : 24.03.2023
நேரம் : காலை 8.00 மணி

சகல பெற்றோர்கள், பழைய மாணவர்கள்
வருகை தருமாறு அன்பாக அழைக்கின்றோம்.

-செயலாளர்

(C-6135)


# ரயில் கழிவறையில் குழந்தை கண்டெடுப்பு

(கொழும்பு)

கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தில் சிசு ஒன்று நேற்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பு - மட்டக்களப்பு புகையிரதத்தின் கழிவறையில் இருந்தே குழந்தை கண்டெடுக்கப்பட்டுள்ளது.

புகையிரத நிலைய அதிகாரிகள் பொலிஸாருக்கு அறிவித்ததை யடுத்து, குழந்தை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ம-7)


விற்பனைக்கு உண்டு

KDH 200 PD-XXXX

வான்

விற்பனைக்குண்டு

T.P: 077 773 0567

(14860)



காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பொற்பதி வீதியிலுள்ள செருக்கபுலம் ஒழுங்கையில் 03 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:

077 233 8321 / 077 540 8208

(14857)


# 31ஆம் நாள் நினைவஞ்சலி

அந்தியேட்டிக் கிரியைகள் 12.03.2023
ஞாயிற்றுக்கிழமை

கடந்த 10.02.2023 வெள்ளிக்கிழமை அன்று
சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

அமரர்

## இரத்தினசபாபதி பவானந்தன்



மண்ணில் 03.10.1952 விண்ணில் 10.02.2023

அவர்களின் சிவப்பேறு குறித்த அந்தியேட்டிக்கிரியைகள் எதிர் வரும் 12.03.2023 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 4.00 மணயளவில் ஊறணி அந்தியேட்டி மடத்தில் நடைபெற்று ஊறணி புனித தீர்த்தக்கரையில் அஸ்தி கரைக்கப்படும், தொடர்ந்து வீட்டுக்கிருத்திய கிரியைகள் அதே தினம் முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெற வுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச்செய்தி கேட்டு நாம் துயருற்றிருந்த வேளையில் எம்முடன் பல வழிகளிலும் துயர்பகிர்ந்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் இன்றுவரை எமக்கு பல உதவிகளையும் செய்து தந்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இங்ஙனம் : குடும்பத்தினர்

(C-6139)

# 11ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## தம்பிப்பிள்ளை ஆனந்தமயில்

(எழுத்தாளர், கவிஞர், ஓய்வுபெற்ற எழுதுவினைஞர் கல்வித் திணைக்களம்)

தோற்றம் : 08.11.1947 மறைவு : 12.03.2012

அன்பின் இருப்பிடமாய்
வாழ்க்கையின் வழிகாட்டியாய்
இலக்கியத்தை போதித்த ஆசானாய்
இருந்து எம்மை வளர்த்த அப்பாவே
நீங்கள் மறைந்து பதினொரு ஆண்டுகள்
ஆகிவிட்டபோதும் உங்கள் அறிவுரைகள்
காதிலே கேட்கிறது...

கொற்றாவத்தை,
பொலிகண்டி கிழக்கு, வல்வெட்டித்துறை.

- குடும்பத்தினர்

(14853)

# மரண அறிவித்தல்



## ஏரம்பு வேல்முருகு

வவுனியா மதவாச்சியைப் பிறப்பிடமாகவும் கரணவாய் சித்தம்பதியை வசிப்பிடமாகவும் கொண்ட ஏரம்பு வேல்முருகு கடந்த செவ்வாய்க்கிழமை (07.03.2023) அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஏரம்பு - அரசம்மா ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நல்லையா - லக்ஷ்மிபிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும், மகாதேவியின் அன்புக் கணவரும், விஜிதாயினி (லண்டன்), வனிதாயினி (கனடா), அசோக்காந், அனுஜிதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், மதிவண்ணன் (கனடா), தனலக்ஷ்மி ஆகியோரின் மாமனாரும், கௌதம், சந்தியா, லக்ஷியா, ஓவியா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.03.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக கிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(14851) தகவல் : குடும்பத்தினர்

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமக

# மரண அறிவித்தல்

பிறப்பு 26 – 11 – 1948



இறப்பு 10 – 03 – 2023

## திருமதி பொன்னம்மாள் (சீதா) பாலகிருஷ்ணன் ஆச்சாரி

கொழும்பைப் பிறப்பிடமாகவும், கன்னாதிட்டியை வதிவிடமாகவும், பலாலி வீதி, 2ஆம் ஒழுங்கையை தற்காலிக வதிவிடமாகவும்கொண்ட திருமதி. பொன்னம்மாள் பாலகிருஷ்ணன் ஆச்சாரி அவர்கள் 10.03.2023 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுடலைமுத்து ஆச்சாரி - நாகம்மா ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வெள்ளைச்சாமி ஆச்சாரி - நாகம்மா ஆகியோரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பாலகிருஷ்ணன் ஆச்சாரியின் அன்பு மனைவியும், இராமலெட்சுமி, சாந்திதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காந்தன், யோகேஸ்வரன் (யோகா) ஆகியோரின் அன்புத்தாயாரும், மங்கையற்கரசி, சுமதி ஆகியோரின் அன்பு மாமியாரும், சங்கீதா, தரணிகா, பிரியதர்ஷன், பாலரிஷிகன், அபிஷாலினி, நிமல்ராஜ், காலஞ்சென்ற சங்கீர்த்தனா ஆகியோரின் பேர்த்தியும், பிருதுவிராஜ் இன் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை (12.03.2023) அன்று காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படு.

இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல. 3,2ஆம் ஒழுங்கை,
பலாலி வீதி, யாழ்ப்பாணம். (14861)

தகவல் : குடும்பத்தினர் (காந்தன்)
077 691 0587

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசிற்கு எதிர்ப்பு தெரிவித்தால் அரசாங்க வேலை இல்லை?

## அரசியல் வட்டாரங்கள் தகவல்

(கொழும்பு)

**அரசாங்கத்திற்கு எதிரான போராட்டங்களில் ஈடுபடுபவர்களுக்கு அரச சேவையில் வேலை வாய்ப்பு வழங்குவதில்லை என அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.**

இது போன்ற போராட்டங்கள் அல்லது நாசவேலைகளில் ஈடுபடுபவர்கள் அடையாளம் காணப்பட்டு அறிக்கை தாக்கல் செய்யப்படும் எனவும் இந்தப் பதிவுகள் டேட்டா பேங்க் வடிவில் பராமரிக்கப்படும் எனவும் கூறப்படுகின்றது. அத்தகையவர்கள் அரசுப் பணிகளுக்கு விண்ணப்பிக்கும்போது, அவர்கள் சம்பந்தப்பட்ட வேலைக்குத் தகுதியற்றவர்களாகக் கருதுவதற்கான அடிப்படை ஆவணம் தயாரிக்கப்படும் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (நி)

## வரிச்சலுகையுடன் மின்சார வாகன இறக்குமதித் திட்டம் ஆரம்பம்

(கொழும்பு)

வெளிநாட்டு ஊழியர்களுக்கு வரிச்சலுகையுடன் கூடிய மின்சார வாகனங்களை இறக்குமதி செய்யும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட வாகனங்களை விடுவிக்கும் பணியை சுங்கத்துறை ஏற்கனவே ஆரம்பித்துள்ள நிலையில், நேற்று முன்தினம் வியாழக்கிழமை முதல் வெளிநாட்டு ஊழியர்களுக்கு வரிச்சலுகையுடன் கூடிய மின்சார வாகனங்களை இறக்குமதி செய்யும் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் சட்டரீதியாக வெளிநாட்டு தொழிலாளர்கள் அனுப்பும் பணத்தின் அடிப்படையில் மின்சார வாகனங்களை இறக்குமதிசெய்வதற்கான யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

குறித்த தொழிலாளி இலங்கைக்கு அனுப்பப்பட்ட பணத்தில் பாதிக்கு சமமான சி.எப்.ஐ மதிப்புடைய மின்சார வாகனங்களை எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

மேலும், மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு செலுத்த வேண்டிய வரியை வெளிநாட்டு நாணயத்தில் செலுத்த வேண்டும்.

இந்த வேலைத்திட்டத்திற்கு வெளிநாட்டு ஊழியர்களிடமிருந்து சாதகமான பதில்கள் கிடைத்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார குறிப்பிட்டுள்ளார். மேலும், கடந்த வருட இறுதிக்குள் வெளிநாட்டுப் பணம் 475 மில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

## ஒக்டோபருக்குள் பணவீக்கம் 4-6 சதவீதமாக குறைவடையும்

### மத்திய வங்கி ஆளுநர் கணிப்பு

(கொழும்பு)

ஒக்டோபர் மாதத்திற்குள் பணவீக்கம் 4-6 சதவீதமாக குறைவடையும் என எதிர்பார்ப்பதாக மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.



தற்போதைய நிலவரங்களைக் கருத்தில் கொண்டு, பணவீக்கம் முன்னறிவிக்கப்பட்டதை விட வேகமாக குறைய வாய்ப்புள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். இந்த ஆண்டு இறுதிக்குள் பணவீக்க விகிதத்தை விரும்பத்தக்கதாகக் குறைக்க வேண்டும் என்பதே தனது எதிர்பார்ப்பு என அவர் கூறியதாக ரொய்ட் டர்ஸ் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு சுமார் 70 சதவீதமாக உச்சத்தை எட்டிய பணவீக்கம், படிப்படியாக குறைந்து வருகிறமை குறிப்பிடத்தக்கது. (நி)

## எரிபொருள் விலை குறைக்கப்படும்

### அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் காலங்களில் எரிபொருள் விலை குறைக்கப்படும் என அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை உரையாற்றிய போதே அமைச்சர் இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளால் அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி உயர்வடைந்து வருகின்றது.

அண்மைய நாட்களில் ரூபாவின் பெறுமதி வலுவடைந்து வருவதால், புதிய எரிபொருள் இருப்புக்கள் குறைந்த விலையில் கொள்வனவு செய்யப்படும.

அத்துடன், கொழும்பு துறைமுகத்தில் இறக்கப்படும் சரக்குகள் குறைந்த விலையில் இறக்குமதி செய்யப்படும்.

இந்த குறைப்பின் நன்மையினை நுகர்வோர் விரைவில் பெற்றுக் கொள்வார்கள்.

எரிபொருள் விலை குறைப்பு ஏனைய பொருட்களின் விலைகளை குறைப்பதற்கும் உதவும் எனவும் அவர் தெரிவித்தார். (நி)

## ராஜபக்ஷக்களுக்கு முக்கிய பதவிகள்

(கொழும்பு)

பாராளுமன்றத்தின் சர்வதேச உறவுகள் தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவராக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ நியமிக்கப்பட்டுள்ளார்.

புதிய நியமனம் கிடைத்தமை பெருமையாக உள்ளது என்று நாமல் டுவிட்டரில் பதிவிட்டுள்ளார்.



இதேவேளை, பாராளுமன்றத்தின் நெறிமுறைகள் மற்றும் சிறப்புரிமைகள் தொடர்பான குழுவின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் சமல் ராஜபக்ஷ ஏகமனதாக நியமிக்கப்பட்டுள்ளார். (நி)

## 36 ஆயிரம் புதிய இணைப்புகளை வழங்க நடவடிக்கை - காஞ்சன

(கொழும்பு)

தாமதமாகியுள்ள சுமார் 36 ஆயிரம் புதிய இணைப்புகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கை மின்சார சபையில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடி காரணமாகவே இவ்வாறு தாமதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி)

## தட்டுப்பாடாகவுள்ள மருந்துகளை வழங்குவதற்கு தயார்-சஜித் பிரேமதாஸ

(கொழும்பு)

மருத்துவமனைகளில் தட்டுப்பாடாக உள்ள மருந்துகளின் பட்டியல் இருப்பின் அவற்றை வழங்குவதற்கு தயார் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

புற்றுநோய், இதய நோய், உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு, கல்லீரல் நோய் போன்றவற்றுக்கான உயிர் காக்கும் மருந்துகளுக்கு மருத்துவமனை அமைப்பில் கடும் தட்டுப்பாடு நிலவுவதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன்அத்தியாவசிய உயிர் காக்கும் உபகரணங்களுக்கும் பாரிய தட்டுப்பாடு நிலவுகிறது.



அதனால் பல முக்கிய சத்திர சிகிச்சைகள் தாமதமாகி வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

## சடுதியாக குறைவடையும் விமான பயணச் சீட்டுகளின் விலை

(கொழும்பு)

பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள இலங் கைக்கு அண்மைக் காலமாக அந்நிய செலாவணியின் உள் வருகை அதிகரித்து வருகிறது.


அதிகளவான டொலரின் உள்வருகையால் ரூபாவின் பெறுமதி கணிசமான அளவு அதிகரித்துள்ளது.

இதன் காரணமாக பொருட்கள் மற்றும் சேவைகளின் கட்டணங்கள் குறைக்கப் பட்டு வருகின்றன. இந்நிலையில் விமான பயணச் சீட்டுகளின் விலை யைக் குறைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இன்று முதல் பய ணச் சீட்டுகளின் விலை 8% குறைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. . (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்ட்
## 2 ஆம் நாள் முடிவில் நியூஸிலாந்து 162-5



இலங்கை மற்றும் நியு ஸிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியின், இரண்டாம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்துள்ளது.

இதன்படி நேற்றைய இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில், பதிலுக்கு முதல் இன்னிங்ஸிற்காக துடுப்பெடுத்தாடி வரும் நியூ ஸிலாந்து அணி, 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 162 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதன்போது ஆட்டநேர முடிவில், மைக்கேல் பிரேஸ்வெல் 9 ஓட்டங்களுடனும் டேரில் மிட் செல் 40 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

இலங்கை கிரிக்கெட் அணியின் 355 என்ற முதல் இன்னிங்ஸ் ஓட்டங்களுடன் ஒப்பிடுகையில், நியூஸிலாந்து அணி, 193 ஓட்டங்கள் பின்னிலையில் உள்ளது.

கிறிஸ்ட்சர்ச் மைதானத்தில் நேற்று முன்தினம் வியாழக் கிழமை ஆரம்பமான இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற நியூஸிலாந்து அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, முதல் இன்னிங்ஸிற்காக 355 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இதனைத்தொடர்ந்து பதிலுக்கு முதல் இன்னிங்ஸை தொடங்கியுள்ள நியூஸிலாந்து அணி, இன்றைய இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில், 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 162 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

இன்னமும் 5 விக்கெட்டுகள் வசமுள்ள நிலையில், போட்டி யின் மூன்றாம் நாள் ஆட்டத்தை நியூஸிலாந்து அணி இன்று தொடரவுள்ளது: (4-6)

# விக்ரம்-ராஜன்-கங்கு
## வெற்றிக்கிண்ணம் இன்று ஆரம்பம்



விக்ரம்-ராஜன் கங்கு வெற்றிக்கிண்ணம்-2023 ஆண்டிற்கான தொடரில் கே.சி.சி.சி,ஜொலிஸ்ரார், யாழ். பல்கலைக் கழகம், ஓல்ட் கோல்ஸ், கிறிஸ் கொம்பர்ஸ், ஏபி அணி ஆகிய ஆறு அணிகள் பங்கு பற்றவுள்ளன.

இவ் ஆறு அணிகளும் இருபிரிவுகளாக ஒரு பிரிவில் 3 அணிகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

30 பந்த பரிமாற்றங்களைக் கொண்ட இத் தொடர் இன்று சனிக்கிழமை கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் ஆரம்ப மாக வுள்ளதுடன் காலை 8.30 மணிக்கு யாழ்.பல்கலைக் கழகம், எபி அணிகள் மோத வுள்ளன.

அதே மைதானத்தில் பிற்பகல் 1 மணிக்கு கிறிஸ் கொம்பர்ஸ், ஓல்ட் கோல்ஸ் அணி கள் மோதவு ள்ளன.

இத்தொடரில் 2022 ஆம் ஆண்டு கிறிஸ்கொம்பர்ஸ் அணி விக்ரம் ராஜன் கங்கு வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கிக் கொண் டமை குறிப்பிடத்தக்கது. (4-6)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2374

துஷா




சுஜி




மஞ்சு




சாமினி




நிலா




சர்மிலா




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2046 இல் சிறுகோள் பூமியைத் தாக்கக் கூடும்

## நாசா எச்சரிக்கை

(வோஷிங்டன்)

2046 ஆம் ஆண்டு காதலர் தினத்தன்று பைசா சாய்ந்த கோபுரத்தின் அளவுள்ள நகரத்தை அழிக்கும் சிறுகோள் பூமியைத் தாக்கக் கூடும் என்று நாசா எச்சரித்துள்ளது.

கடந்த பெப்ரவரி மாதம் 28 ஆம் திகதி இது உறுதிப்படுத்தப்பட்டது.

இதன்படி 2046. பெப்ரவரி 14 அன்று மாலை 4:44 மணிக்கு இந்தத் தாக்கம் ஏற்படுவதற்கான ஏதுக்கள் உள்ளன.

எனினும் அந்த சிறுகோள் பூமியில் எங்கு விழும் என்பது இன்னும் தெரியவில்லை.

இந்த சிறுகோள், பூமியுடன் மோதுவது 114 ஆண்டுகளுக்கு முன்பு சைபீரியாவில் மோதிய துங்குஸ்கா 12-மெகாடன் நிகழ்வுடன் ஒப்பிடப்பட்டுள்ளது.

இந்த 160 அடி சிறு கோள் ஒரு அணு வெடிப்பை போன்ற தாக்கத்தை ஏற்படுத்தியது. இதன் போது ஏற்பட்ட தாக்கம் ஒரு பெரிய பெருநகரத்தை அழித்திருக்கும் திறனைக் கொண்டிருந்தது. எனினும் அது ஒரு காட்டில் வீழ்ந்தபோது, 80 மில்லி யனுக்கும் அதிகமான மரங்கள் தரைமட்டமாகின.

"இத்தகைய நிகழ்வுகள் சராசரியாக 100,000 ஆண்டுகளுக்கு ஒருமுறை நிகழ்வதாக நாசா தெரிவித்தது.(நி)

# ஹைப்பர்சோனிக் ஏவுகணைகள் மூலம் உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல்

## 9 பேர் உயிரிழப்பு



(கீவ்)

அரிய ஹைப்பர்சோனிக் ஏவுகணைகள் உட்பட சக்தி வாய்ந்த ஆயுதங்களை பயன்படுத்தி ரஷ்யா, உக்ரைன் முழுவதும் நடத்திய தாக்குதல்களில், சுமார் ஒன்பது பேர் உயிரிழந்துள்ளனர்.

படையெடுப்பின் ஆரம்ப மாதங்களில் இருந்து ரஷ்யா கின்சல் ஹைப்பர்சோனிக் ஏவுகணைகளை ஏவவில்லை என கூறப்பட்ட போதும், தற் போது நேற்று முன்தினம் வியா ழக்கிழமை முதல்முறையாக உக்ரைன் மீது குறித்த ஏவுகணைகள் ஏவப்பட்டுள்ளன.

ஜனவரி மாத இறுதியில் இருந்து உக்ரைன் மீதான ரஷ்ய தாக்குதல்களின் மிகப் பெரிய தாக்குதல் இதுவாகும். (நி)

# வடகொரியா மீண்டும் ஏவுகணை சோதனை

(பியாங்யாங்)

தென் கொரியாவுக்கு அமெரிக்கா ஆதரவாக இருந்து வருகிறது. இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் வடகொரியா தொடர்ச்சியாக கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகளை ஏவி சோதனை நடத்தி அச்சுறுத்தி வருகிறது.

இதன் தொடர்ச்சியாக நேற்றும் வடகொரியாவின் மேற்கு கடற்கரையோரம் உள்ள நாம்போநகர் என்ற பகுதியில் கடலை நோக்கி குறுகிய தொலைவு செல்லும் பாலிஸ்டிக் ஏவுகணை சோதனை மேற்கொண்டதாக தென்கொரியா இராணுவம் தெரிவித்து உள்ளது. ஆனால் இந்த ஏவுகணை எவ்வளவு தூரம் சென்றது என்ற தகவலை இராணுவம் தெரிவிக்கவில்லை. (நி)

# 3 ஆவது தடவையும் ஜனாதிபதியாக ஜீ ஜின்பிங்



(பீஜிங்)

சீனாவின் ஜனாதிபதி ஜீ ஜின்பிங், 3 ஆவது தடவையாகவும் அந்நாட்டின் பாராளுமன்றத்தினால் நேற்று தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவராக மேலும் 5 வருடங்களுக்கு கடந்த ஒக்டோபர் மாதம் ஜீ ஜின்பிங் நியமிக்கப்பட்டிருந்தார்.

அதைத் தொடர்ந்து அவரின் 3 ஆவது ஜனாதிபதி பதவிக் காலத்தை பாராளுமன்றம் நேற்று உறுதிப்படுத்தியுள்ளது.

சீனாவின் வரலாற்றில் மாவோ சேதுங்குக்குப் பின்னர் மிகச் சக்தி வாய்ந்த தலைவராக இவர் விளங்கு கிறார். 69 வயதான இவர் 2012 ஆம் ஆண்டு முதல் சீன ஜனாதிபதியாக பதவி வகித்து வருகிறார். (நி)

# ஜேர்மனியில் துப்பாக்கிச் சூடு

## ஏழு பேர் உயிரிழப்பு-எட்டு பேர் காயம்

(பேர்லின்)

ஜேர்மனியின் ஹம்பர்க் நகரத்தில் உள்ள யெகோவா வின் தேவாலயத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டில், ஏழு பேர் உயிரிழந்துள்ளதாகவும் எட்டு பேர் காயமடைந்ததாகவும் உள்ளூர் ஊடகங்களை மேற்கொள்காட்டி றொய்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. உயிரிழந்தவர்களில் குற்றவாளி இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். மேலும் தாக்குதலுக்கான நோக்கம் தெளிவாக இல்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (நி)

# இராசிபலன்

11.03.2023
மாசி 27, சனிக்கிழமை
சதுர்த்தி முன்னிரவு 8.57 மணிவரை
சித்திரை காலை 6.33 மணிவரை
சுபநேரம் -3.23-4.53 மணிவரை
இராகுகாலம்- 9.23-10.53 மணிவரை
சங்கடஹர சதுர்த்தி விரதம்
சந்திராஷ்டம் -ரேவதி

வளவன்




மறக்க முடியாத இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், உடல் நலன் சீராகும், போசன சுகமுண்டு.




பெற்றோர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், சுப தகவல்கள் வந்து சேரலாம், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.




புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, தேக நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சுப செலவுகள் அதிகரிக்கும், போசன சுகமுண்டு.




சான்றோர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், வருமானம் திருப்திகரமானதாக அமையும், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், உற்சாகமான நாள்.




குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், உள்ளம் மகிழும் வகையில் உதிரிவருமானங்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.




உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காண்பீர்கள், உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள்.




பக்கபலமாக இருப்பவர்கள் உங்கள் பாகப் பிரிவினைக்கு ஒத்துழைப்பு வழங்குவர், தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம்.




நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், பேச்சைக் குறைத்து செயலால் வேகம் காட்டுவீர்கள், உடல் நலன் சீராகும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.




பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.




குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள், சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் உருவாகும், வழிபாட்டால் மகத்துவம் காணும் நாள்.




மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், நினைத்தது நிறைவேறி நிம்மதி கிடைக்கும் நாள், வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கும் வாய்ப்புண்டு.




குடும்பத்தில் சிறு சிறு வாக்குவாதங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், பணப் பற்றாக்குறை ஏற்படலாம், தொழில் ரீதியான பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

தீய செயலை பாராட்டுபவன் தீயவனாகத் தான் இருப்பான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவு.பல்கலை கல்விசாரா ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு



(குருமன்காடு)

வவுனியா பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் நேற்று பணிப்பகிஷ்கரிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வவுனியா பல்கலைக்கழகத்திற்கு முன்பாக ஒரு மணிநேர குறித்த பணிப் பகிஷ்கரிப்பு போராட்டம் இடம்பெற்றது.

மின்சாரம் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் விலை உயர்வு மற்றும் ஊழியர் நியமனம், சம்பளப் பிரச்சினை போன்றவற்றினை கண்டித்தே இப்போராட்டம் நடைபெற்றது. இதன் போது "மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகள் மீது கை வைக்காதே, சம்பள அதிகரிப்பின் மிகுதியை வழங்கு, மின்சார - எரிபொருள் விலையை குறை, சம்பள உயர்வை வழங்கு" போன்ற பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இதேவேளை, தமது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத பட்சத்தில் எதிர்வரும் 15 ஆம் திகதி இவ் கல்விசாரா ஊழியர்கள் மீண்டும் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக குறிப்பிட்டிருந்தனர். (4-6-250)

### பலாலி விமானநிலைய காணி சுவீகரிப்பு

# ஏப்ரல் 4,5,6 ஆம் திகதிகளில் நட்டஈட்டு கோரிக்கை விசாரணை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலக எல்லைக்குள் மயிலிட்டி வடக்கு(J/246), மயிலிட்டி தெற்கு (J/240), குரும்பசிட்டி (J/242), பலாலி தெற்கு (J/252), பலாலி மேற்கு (J/256) ஆகிய கிராம அலுவலர் பிரிவுக்குள் பகுதியளவாக விரிவுபடுத்தப்படும் பலாலி சர்வதேச விமான நிலைய காணி சுவீகரிப்பிற்கான காணி உரிமையாளர்களுக்கு காணி எடுத்தல் சட்டம் பிரிவு 9 இன் கீழ் ஆவணங்கள் பரிசீலணை மற்றும் நட்ட ஈட்டுக் கோரிக்கை தொடர்பான விசாரணை எதிர்வரும் 04.04.2023 செவ்வாய்க்கிழமை, 05.04.2023 புதன்கிழமை, 06.04.2023 வியாழக்கிழமை ஆகிய தினங்களில் காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் நடைபெற உள்ளது.

குறித்த தினத்தில் காணி உரிமையாளர்கள் தங்களது ஆவணங்கள் மற்றும் கோரிக்கைகளை முன்வைக்க முடியுமெனவும் பிரதேச செயலாளர் எஸ்.சிவஸ்ரீ அறிவித்துள்ளார். (4-6)

# தமிழ் மக்கள் கட்சியின் பொதுக்கூட்டம்

(வவுனியா)

தமிழ் மக்கள் கட்சியின் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை வவுனியா, நெளுக்குளம், மன்னார் வீதியில் அமைந்துள்ள வவுனியா மாவட்ட அமைப்பாளர் பெரியசாமி விஜேகர் இல்லத்தில் மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

இக்கூட்டம் கட்சியின் தலைவர் பொன்னுசாமி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளதுடன், கட்சியின் முக்கியஸ்தர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இக்கூட்டத்தில் உள்ளூராட்சிக் கிளைகள் தோறும் பொறுப்பாளர்களை நியமிப்பது தொடர்பாகவும் நடைபெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ் மக்கள் கட்சி சார்பாக போட்டியிடும் வேட்பாளர்களின் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்படவுள்ளதால் கட்சியின் அனைத்து உறுப்பினர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கட்சித் தலைவர் அறிவித்துள்ளார். (4-6)



யா/ இமையாணன் அ.த.க வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர்போட்டி கடந்த 8 ஆம் திகதி நடைபெற்றது.

(படம்: மகாலிங்கம்)


# வாகன இலக்கத்தகடுகளை பெற்றுக் கொள்ளவும்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள தலைமை அலுவலகத்திலிருந்து 2023.03.02 ஆம் திகதி யாழ். மாவட்ட அலுவலகத்திற்கு கிடைக்கப் பெற்ற வாகன இலக்கத்தகடுகளின் பட்டியல், யாழ். மாவட்டத்திலுள்ள அனைத்து பிரதேச செயலகங்களிலும் மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்திலும் பொதுமக்களின் பார்வைக்காக அறிவிப்புப் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் மாவட்டச் செயலக இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

https://dmtappointments.fmt.gov.lk என்ற இணையத்தளத்தில் பிரவேசிப்பதன் ஊடாக அல்லது 021211716 என்ற தன்னியக்க தொலைபேசி இலக்கத்தை அழைப்பதன் மூலம் திகதியையும் நேரத்தையும் முற்பதிவு செய்து, அதற்காக தங்கள் கைத்தொலைபேசிக்கு DMT ஆல் அனுப்பப்பட்ட குறுந் தகவலுடன், புதிதாக வாகனங்களைப் பதிவு செய்த உரிமையாளர்கள் வாகனப் பதிவுப் புத்தகம், தேசிய அடையாள அட்டை என்பவற்றையும் வாகன உரிமை மாற்றம் பெற்றவர்கள் மேற்குறித்த இரு ஆவணங்களுடன் பழைய வாகன இலக்கத் தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பெறித்த ஒட்டும் தாள் (Sticker) என்பவற்றையும் யாழ்.மாவட்ட மோட்டார் வாகனப் போக்குவரத்து அலுவலகத்தில் குறிப்பிடப்பட்ட திகதியில் குறித்த நேரத்திற்கு சமர்ப்பித்து தங்கள் வாகனங்களுக்குரிய இலக்கத் தகடுகளைப் பெற்றுக் கொள்ளலாம் என யாழ். மாவட்ட போக்கு வரத்து திணைக்கள உதவி ஆணையாளர் ஆர்.சிவகரன் அறிவித்துள்ளார். (4-6)



சென்.ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தில் திறன் வகுப்பறை திறப்புவிழா நேற்றுமுன்தினம் பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெற்றது. திறன் வகுப்பறையை வடமாகண கல்விப் பணிப்பாளர் யோண்குயின்ரஸ் திறந்து வைத்துள்ளார்.

(படம்: ஏனெஸ்ட்)

# மீற்றர் வட்டி செயற்பாடுகளுக்கு அனுமதி வழங்கக் கூடாது

### சாவ.நகரசபை உப தவிசாளர்

(சாவகச்சேரி)

மீற்றர் வட்டிச் செயற்பாடுகளுக்கு சாவகச்சேரி நகரசபை எந்தவிதமான அனுமதிகளையும் வழங்கக்கூடாது என சாவகச்சேரி நகரசபையின் உப தவிசாளர் அ.பாலமயூரன் சுட்டிக்காட்டியுள்ளார். அண்மையில் நகரசபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில் நகரசபை எல்லைக்குள் தனியார் சிலரால் அதிகரித்த வட்டிக்கு பணம் கடனாக கொடுக்கப்படுகிறது. ஒரு இலட்சத்திற்கு மாதாந்தம் வட்டியாக பத்தாயிரம் ரூபாய் என்ற அதிகரித்த தொகையை அறவிடுகின்றனர். பின்னர் குறித்த பணத்தை வசூலிக்க வாள்களுடன் இரவு வேளைகளில் வீடுகளுக்குச் செல்லும் நிலையும் காணப்படுகிறது.

யாழ்.மாவட்டத்தில் குறித்த தொழிலை மேற்கொள்பவர்கள் பலரும் எந்தவிதமான பதிவுகளும் இல்லாதவர்களாகவே உள்ளனர். எனவே சாவகச்சேரி நகரசபை பொதுமக்களின் நலன்கருதி குறித்த தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு எந்தவிதமான அனுமதியையும் வழங்கக்கூடாது. அனுமதிகோரி அவர்கள் பதிவுகளை மேற்கொண்டால் அவற்றை மக்களின் நலன் கருதி நிராகரிக்க வேண்டும் என மேலும் அவர் தெரிவித்தார். (4-6-30)

# வவுனியாவில் சடலமாக மீட்கப்பட்ட நால்வரின் இறுதிச்சடங்கு நேற்று



(நெளுக்குளம்)

வவுனியா குட்செட்வீதியில் இரு சிறுமிகள் உட்பட ஒரே குடும்பத்தை சேர்ந்த நான்கு பேர் அண்மையில் சடலமாக மீட்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் குறித்த நால்வரதும் இறுதிச்சடங்குகள் நூற்றுக்கணக்கான மக்களின் கண்ணீருக்கு மத்தியில் நேற்று குட்செட்வீதி உள்ளக வீதியில் அமைந்துள்ள அவர்களது இல்லத்தில் இடம்பெற்று வெளிக்குளம் மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது. (4-6-299)

கொக்குவில் இந்துக் கல்லூரி விளையாட்டு விழா நேற்று முன்தினம் வியாழன் கல்லூரி அதிபர் ஞானசம்மந்தன் தலைமையில் நடைபெற்றது.

(படம்: [illegible])




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் 6.3 மில்லியன் மக்கள் உணவுப் பற்றாக்குறையால் பாதிப்பு

(அபுதாபி)

இலங்கையில் 6.3 மில்லியன் மக்கள் கடுமையான உணவுப் பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ளனர்.

அண்மையில் துபாயில் நடைபெற்ற சர்வதேச கருத்தரங்கு ஒன்றில் இந்த விடயம் தெரியவந்துள்ளது.

மேலும், 2022 ஆம் ஆண்டில் குறைந்து வரும் உணவு உற்பத்தி மற்றும் பணவீக்கம் காரணமாக, இலங்கையின் மொத்த சனத்தொகையில் 59 சதவீதமான குடும்பங்கள் தேவையான உணவைப் பூர்த்தி செய்ய இயலவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## ஏப்ரலில் தேர்தல் இடம்பெற்றாலும் பதவிக் காலம் 2024 இல் தான் ஆரம்பம்

### இராஜாங்க அமைச்சர் ஜானக வகும்புர

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் ஏப்ரல் 25 ஆம் திகதி இடம்பெற்றாலும் அதில் தெரிவு செய்யப்படும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களின் பதவிக் காலம் 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 1 ஆம் திகதியில் இருந்து தான் ஆரம்பமாகும் என மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் இராஜாங்க அமைச்சர் ஜானக வகும்புர தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற சர்வஜன வாக்குரிமை தொடர்பான முதல்நாள் விவாதத்தில் உறையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (நி)

## வாக்குச் சீட்டுகளை விரைவில் வழங்க முடியும் என நம்பிக்கை

(கொழும்பு)

தபால் மூல வாக்களிப்புக்கான வாக்குச் சீட்டுகளை ஐந்து நாட்களுக்குள்ளும் ஏனைய வாக்குச் சீட்டுகளை இருபது முதல் இருபத்தைந்து நாட்களுக்குள்ளும் விநியோகிக்க முடியும் என அரச அச்சகம் தெரிவித்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அச்சிடுவதற்குத் தேவையான நிதியை நிதியமைச்சின் செயலாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ளுமாறு தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மேலும், பொலிஸ் பாதுகாப்பை வழங்குவது தொடர்பில் தேவையான அனைத்து விபரங்களையும் பொலிஸ்மா அதிபருக்கு வழங்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழு அரச அச்சகத்திற்கு அறிவித்துள்ளது.

மேலும், உள்ளூராட்சிசபைத் தேர்தலுக்கான எரிபொருளை வழங்குவது தொடர்பில் விரைவில் இணக்கப்பாடு எட்டப்படும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும், தேர்தலில் போட்டியிடும் அரச ஊழியர்களின் அடிப்படை சம்பளத்தை தாமதமான காலத்திற்கு மாத்திரமே வழங்க வேண்டும் என தேசிய தேர்தல் ஆணைக்குழு பரிந்துரை செய்துள்ளது. (நி)

## உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான புதிய வர்த்தமானி வெளியீடு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கான தினத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு புதிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நிதி நெருக்கடி உள்ளிட்ட பல்வேறு காரணிகளால் கடந்த 9 ஆம் திகதி இடம்பெறவிருந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எதிர்வரும் ஏப்ரல் 25 ஆம் திகதி நடத்துவதற்கு தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. அதற்கமைய தேர்தலுக்கான தினம் தொடர்பில் ஏற்கனவே வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு , மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களினால் புதிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப் பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத் நாயக்க மேலும் தெரிவித்துள்ளார். (நி)


## பகிரங்க ஏலவிற்பனை - 2023
## பருத்தித்துறை பிரதேச சபை-புலோலி

பருத்தித்துறை பிரதேச சபையின் ஆணைவிழுந்தான் வாகன தரிப்பிடத்தில் அலுவலகத் தளபாடங்கள், உபகரணங்கள் பகிரங்க ஏலத்தில் பின்வரும் திகதி விபரப்படி விற்பனை செய்யப்படவுள்ளன.

ஏலவிற்பனையில் பொருட்களை கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் மேற்குறித்த இடத்தில் ஏலவிற்பனை நடைபெறும் நாள் **மு.ப 9.00 மணி முதல் மு.ப.10.00 மணி வரை** ஏலவிற்பனைப் பொருட்களைப் பார்வையிடலாம். ஏலவிற்பனைப் பொருட்களை பெறுகின்றவர்கள் உடனடியாக முற்பணத்தினைச் செலுத்தி பற்றுச்சீட்டைப் பெற்று அன்றைய தினம் பி.ப 4.00 மணிக்கு முன்னர் பொருட்களை அவ்விடத்தில் இருந்து அகற்றுதல் வேண்டும்.

ஏலவிற்பனை திகதி :-16.03.2023
வியாழக்கிழமை மு.ப.10.00 மணி
இடம்:- ஆனைவிழுந்தான் வாகனத் தரிப்பிடம்,
பருத்தித்துறை பிரதேச சபை.

| இல | பொருட்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | Safety hand gloves | 1 |
| 2 | Nose plier | 1 |
| 3 | Plier | 1 |
| 4 | Water Level-1" | 1 |
| 5 | Fan-Celling | 2 |
| 6 | Grease Pump-10kg | 1 |
| 7 | Photo copy Machine-Canon 2420 | 1 |
| 8 | Projector | 1 |
| 9 | Tape-30 M | 1 |
| 10 | Tyre 19.5-2.4 | 1 |
| 11 | Tyre 14.5-19 | 2 |
| 12 | Tyre 12.4/11-28 | 4 |
| 13 | Tyre 7.50-16 | 2 |
| 14 | Tyre 6.00-16 | 2 |
| 15 | battery 120.A | 1 |
| 16 | battery 100. A | 4 |
| 17 | battery 90.A | 5 |
| 18 | Grass Cutter | 4 |
| 19 | Garbage Bin | 10 |
| 20 | Dinning Chair | 2 |
| 21 | Office Chair | 3 |
| 22 | Computer Chair | 2 |
| 23 | Cheval | 1 |
| 24 | Table | 1 |

**அ.சா.அரியகுமார்,**
**தவிசாளர்,**
**பருத்தித்துறை பிரதேச சபை,**
**புலோலி.**



## பெயர்மாற்ற அறிவித்தல்

சிவபூதராயர் வீதி சுன்னாகம் தெற்கில் வசிக்கும் ஜெயராசா ஆகிய நான் இன்று முதல் எனது பெயரை ஜெயராசா சர்மா என பெயர் மாற்றம் செய்கிறேன். எனவே இனிவரும் காலங்களில் என் சார்ந்த சகல ஆவணங்களிலும் இப்பெயரையே பயன்படுத்துவேன் என இலங்கை வாழ் சனநாயகக் குடியரசின் கீழ் வாழும் மக்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றேன்.

**கி.ஜெயராசா சர்மா**

(4850)


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 160 | 200 | 240 |
| உருளைக்கிழங்கு | 140 | 140 | 120 | 150 |
| பச்சைமிளகாய் | 350 | 340 | 300 | 350 |
| தக்காளி | 220 | 80 | 100 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 180 | 200 |
| கோவா | 50 | 80 | 80 | 100 |
| கரட் | 120 | 180 | 140 | 200 |
| பூசணி | 80 | 80 | 80 | 80 |
| புடோல் | 200 | 180 | 160 | 200 |
| வாழைக்காய் | 160 | 150 | 140 | 160 |
| சின்ன வெங்காயம் | 250 | 280 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 150 | 140 | 130 | 150 |
| பாகற்காய் | 400 | 400 | 400 | 500 |
| வெண்டக்காய் | 350 | 280 | 200 | 400 |
| கருணைக் கிழங்கு | 100 | 90 | 80 | 150 |
| பயற்றங்காய் | 250 | 200 | 300 | 200 |
| லீக்ஸ் | 250 | 240 | 250 | 250 |
| பீற்றூட் | 200 | 240 | 200 | 280 |
| கறிமிளகாய் | 350 | 300 | 350 | 350 |
| முருங்கைக்காய் | 2000 | 1500 | 1500 | 2000 |
| போஞ்சி | 240 | 200 | 240 | 220 |
| கத்தரிதம்புள்ள | 160 | 150 | 240 | 240 |
| கீரை - 1 பிடி | 120 | 100 | 100 | 120 |
| தேசிக்காய் | 200 | 200 | 150 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 80 | 80-100 |
| இராசவள்ளி | 300 | 350 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 160 | 120 | 100 | 200 |
| முள்ளங்கி | 80 | 80 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 80 | 60 |
| வல்லாரை | 40 | 25 | 50 | 60 |
| ஈரப்பலா | 100 | 140 | 100 | 100 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 124





சக்கரவர்த்தி இந்த இடத்தில் குறுக்கிட்டு, "ஆகா! இறைவனைப் பிரத்யட்சமாகத் தரிசித்த மகானைத் தவிர வேறு யாரால் இவ்வளவு துணிச்சலாகப் பாட முடியும்? அப்பர் சுவாமிகளுக்குக் கொடிய சூலை நோய் இருந்தது. இறைவன் அருளால் நோய் நீங்கிற்று. எனவே, 'பிணியறியோம்' என்று பாடியிருக்கிறார்.

புலவர்களே! என்னைப் பற்றியும் என் கொடைகளைப் பற்றியும் பாடுவதை நிறுத்திவிட்டு, இனி இத்தகைய அருள் வாக்கைப் பாடுங்கள்! அப்பரும் சம்பந்தரும் சுந்தரமூர்த்தியும் இதுபோல் ஆயிரக்கணக்கான பக்திமயமான தீந்தமிழ்ப் பாடல்களைப் பாடியிருக்கிறார்கள். அப்பாடல்கள் எல்லாவற்றையும் ஒருங்கு சேர்த்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்? படித்தும் பாடியும் பரவசம் அடைவதற்கு ஓர் ஆயுட்காலம் போதாது அல்லவா?" என்றார்.

"அரசர்க்கரசே! தாங்கள் அனுமதித்தால் அந்தத் திருப்பணியை இப்போதே தொடங்குகிறோம்!"

"இல்லை என்னுடைய காலத்தில் நடக்கக்கூடிய திருப்பணி அல்ல அது. எனக்குப் பின்னால்" இவ்விதம் கூறித் தயங்கி நின்ற சுந்தர சோழர் சிந்தனையில் ஆழ்ந்தார்.

அரண்மனை மருத்துவர், சின்னப் பழுவேட்டரையரின் அருகில் வந்து அவர் காதில் ஏதோ சொன்னார்.

அதைக் கவனித்த சுந்தர சோழர் தூக்கிவாரிப் போட்டவரைப் போல் கண்ணை நன்கு விழித்துச் சபையோரைப் பார்த்தார். வேறொரு உலகத்திலிருந்து, மரணத்தின் வாசலிலிருந்து, யமனுலகக் காட்சியிலிருந்து, திடீரென்று திரும்பி வந்தவரைப் போல் சக்கரவர்த்தி தோன்றினார்.

"பிரபு! சங்கப் பாடல் ஒன்றைக் கேட்க வேண்டும் என்று தாங்கள் விருப்பத்தைத் தெரிவித்தீர்கள். அதை மட்டும் சொல்லி விட்டு இவர்கள் போகலாமல்லவா?" என்றார் சின்னப் பழுவேட்டரையர்.

"ஆம், ஆம் மறந்து விட்டேன் என்னுடைய உடல் மட்டும் அல்ல; உள்ளமும் சுவாதீனத்தை இழந்து வருகிறது. எங்கே? சங்கப் பாடலைச் சொல்லட்டும்!" என்றார் மன்னர்.

சின்னப் பழுவேட்டரையர் நல்லன் சாத்தனாருக்குச் சமிக்ஞை செய்தார். புலவர் தலைவர் எழுந்து கூறினார் "அரசே! தங்களுடைய முன்னோர்களில் மிகப் பிரபலமானவர் கரிகால் பெருவளத்தார். இமயமலையில் புலிக் கொடியைப் பொறித்த மாவீரர்.

அவருடைய ஆட்சிக் காலத்தில் பூம்புகார் காவேரிப்பட்டினம் சோழ மகாராஜ்யத்தின் தலைநகரமாயிருந்தது. பற்பல வெளிநாடுகளிலிருந்தும் பற்பல பொருட்கள் மரக்கலங்களில் வந்து இறங்கிய வண்ணமிருந்தன. பூம்புகாரின் செல்வப் பெருக்கையும் வளத்தையும் வர்ணிக்கும் சங்கப் புலவர் ஒருவர் இன்னின்ன நாட்டிலிருந்து இன்னின்ன பொருட்கள் வந்தன என்பதைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். அந்தப் பாடல் பகுதி இது:

**வடமலைப் பிறந்த**
**மணியும் பொன்னும்**
**குடமலைப் பிறந்த வாரமும்**
**அகிலும்**
**தென்கடல் முத்தும்**
**குணகடல் துகிரும்**
**கங்கை வாரியும் காவிரிப்**
**பயனும்**
**ஈழத்து உணவும் காழகத்**
**தாக்கமும்"**

பாடலில் இந்த இடம் வந்தபோது சுந்தர சோழர் கையினால் சமிக்ஞை செய்யவே, புலவர் நிறுத்தினார்.

"தளபதி! கரிகால் வளவர் காலத்தில் ஈழநாட்டிலிருந்து தமிழகத்துக்கு உணவுப் பொருட்கள் வந்து கொண்டிருந்தது என்று இப்பாடல் சொல்கிறது. அதை நான் அறிவதற்காகத் தானே இப்புலவர்களை அழைத்து வந்தீர்?"

"ஆம், அரசே!" என்று கோட்டைத் தளபதி கூறியது சிறிது ஈனஸ்வரத்தில் கேட்டது. "அறிந்து கொண்டேன் இனி இப்புலவர்களைப் பரிசில்கள் கொடுத்து அனுப்பி விடலாம்!" என்றார் மன்னர்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்


## எலிஷுப் போச்சு! எண்ணெய் வந்தது!

(நேற்றைய தொடர்ச்சி)

"வேண்டாம் நாங்கள் சொல்வதைக் கேள். நீ அவனிடம் மாட்டிக் கொண்டு துன்பப்படப் போகிறாய்" என்று எச்சரித்தன மற்றப் பேய்கள்.

உழவனின் வீட்டிற்குச் சென்றது புதுப் பேய். வாய்ப்பை எதிர்பார்த்து மாட்டுத் தொழுவத்தில் பதுங்கி இருந்தது அது.

வெளியூரில் இருந்து வாங்கி வந்த பல மாடுகள் அங்கே கட்டப்பட்டு இருந்தன. புதுப்பேய் என்ற ஊரில் வாங்கிய மாடும் அவற்றுள் ஒன்று. அது முரட்டு மாடாக இருந்தது.



புதிய மாடுகளுக்கு அடையாளம் தெரிவதற்காக சூடு வைக்க நினைத்தான் அவன்.

தன் வேலைக்காரனைப் பார்த்து, "டேய்! அந்தப் புதுப்பேயை இழுத்து வந்து கட்டு. பழுக்கக் காய்ச்சிய இரும்புத் துண்டால் பெரிய சூடு போட வேண்டும். வெளியூர் என்பதால் நம்மைப் பற்றித் தெரியாமல் ஆட்டம் போடுகிறது. சூடு போட்டவுடன் அதுவும் இங்குள்ளவை போல ஆகிவிடும். ஒழுங்காகப் பணிந்து நடக்கும்" என்று உரத்த குரலில் கத்தினான் அவன்.

பதுங்கி இருந்த புதுப் பேய் இதைக் கேட்டு நடுங்கியது. "ஐயோ! எல்லாப் பேய்களும் தடுத்தனவே! என் ஆணவத்தால் அவற்றை மீறி வந்தேனே! பெரிய மீசையுடன் இருக்கும் இவனைப் பார்த்தாலே பயமாக இருக்கிறதே. சிறிதும் இரக்கம் இல்லாதவன் போலத் தோன்றுகிறான்.

நாம் நன்றாக மாட்டிக் கொண்டோம். தப்பிக்க வழியே இல்லை. நமக்குப் பெரிய சூடு போடத்தான் போகிறான். என்ன செய்வது?" என்று குழம்பியது அது.

மாட்டைக் கட்டுவதற்காக உழவன் பெரிய கயிற்றுடன் வந்தான்.

அவன் கால்களில் விழுந்த புதுப்பேய், "ஐயா! என்னை மன்னித்து விடுங்கள். தெரியாமல் நான் இங்கே வந்து விட்டேன். எனக்குச் சூடு போட்டு விடாதீர்கள்" என்று கெஞ்சியது.

தன் நடுக்கத்தை மறைத்துக் கொண்ட அவன், "என் எதிரில் வர உனக்கு என்ன துணிச்சல்? உன்னை என்ன செய்கிறேன் பார்?" என்று கோபத்துடன் கத்தினான்.

இவனிடமிருந்து எப்படித் தப்பிப்பது என்று சிந்தித்தது அது. "எல்லாப் பேய்களும் என்னை உங்களிடம் அனுப்பி வைத்தன" என்று பொய் சொன்னது.

"எதற்காக அனுப்பினார்கள்? உண்மையைச் சொல். இல்லையேல் உன்னைத் தொலைத்து விடுவேன்" என்று இடிக்குரலில் முழங்கினான் அவன்.

"பேய்கள் உங்களுக்கு ஆண்டுதோறும் நூறு மூட்டை எள் தருகின்றன.

(தொடர்ச்சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தந்திரமும் ஏமாற்றமும் அறநெறி நிற்கப் போதுமான அறிவில்லாத மூடர் செயலாகும்.
– ஃபிராங்க்லின்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## குழம்பிக் கிடக்கிறது நாடு குறட்டை விடுகிறது அரசு!

நாடு என்றொரு அதிகாரத்தை வள்ளுவர் வகுத்தார்.

நாடு என்றால் அது எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கான விளக்கம் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

வள்ளுவரின் கருத்து நிலை நின்று எமது இலங்கையை நோக்கினால் இலங்கை நாடு என்ற வரைய்பறைக்குள் அடங்குமா? என்ற சந்தேகம் எழவே செய்யும்.

அந்தளவுக்கு எங்கள் நாடு பல வழிகளாலும் குழம்பிப் போய்க்கிடக்கிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தான் நினைத்தபாட்டில் ஆட்சி அதிகாரத்தை கையாளுகின்றார்.

அதேநேரம் அமைச்சுகள் தத்தம் பாடு.

இதில் ஆணைக்குழுக்கள் படும்பாடு வேறு.

நிலைமை இதுவாக இருக்கையில், தொழிற் சங்கப் போராட்டங்கள் தம்பாட்டில் நடக்கிறது.

குறித்த நிறுவனப் பணியாளர்கள் தொழிற் சங்கப் போராட்டத்தில் ஈடுபடுவதால் பிரஸ்தாப தொழில் ஸ்தாபனம் இயங்க முடியாத நிலைக்கு உட்படுகின்றது.

இதனால் பொதுமக்கள் மற்றும் பட்டப்படிப்பு மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

இருந்தும் அதுபற்றிக் கவனிப்பதற்கும் கவலை கொள்வதற்கும் ஆளில்லை என்றாகிவிடுகிறது.

அதாவது தொழிற்சங்கப் போராட்டங்கள் நடந்தால் அது நடக்கட்டும் அதனால் அரச நிறுவனங்கள் இயங்காவிடினும் அதுபற்றி நமக்குக் கவலையில்லை என்ற நினைப்பே அரசாங்கத்தினுடையதாகிறது.

இதற்கு மேலாக, உயர் வருமானத்தின் மீதான வரிவிதிப்புத் தொடர்பில் எதிர்ப்பு வலுவடைந்து வருகிறது.

இதில் தொழிற்சங்கங்கள் முனைப்புக் காட்டியுள்ளன.

கூடிய சம்பளத்தில் வரி அறவிடுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கின்றவர்கள் தங்களைப் பற்றியே சிந்திக்கின்றனர்.

அதாவது பாலுக்குச் சர்க்கரையில்லை என்பது அவர்களின் கவலை. ஆனால் இங்கோ கஞ்சிக்கு உப்பில்லை என்று அழுகின்ற ஏழைகள் பற்றிச் சிந்திப்பதற்கு மனிதர்களில் யாருமில்லை.

இதுதான் இந்த நாட்டின் சமகால நிலைப்பாடாகும்.

உண்மை. ஏழை மக்கள் தமது அன்றாடச் சீவியத்துக்காக வருந்துகின்றனர்.

இருந்தும் அவர்கள் சார்பில் போராட்டம் நடத்துவதற்கோ அவர்களுக்கு உரிய நிவாரணம் வழங்கப்பட வேண்டுமென்று கேட்பதற்கோ தொழிற்சங்கங்கள் இல்லை.

தவிர, இப்போது ரூபாயின் பெறுமதி அதிகரித்துள்ளது. இருந்தும் அதனால் தங்கத்தின் விலை குறைந்ததைத் தவிர, வேறு எதுவும் நடக்கவில்லை.

பாணின் விலை, கோதுமைமாவின் விலை அரிசியின் விலை, பால்மா பைக்கற்றுக்களின் விலை என எதுவும் ஏறிய வேகத்தில் இறங்க மறுக்கின்றன.

இவ்வாறாக நாடு அலங்கோலப்பட்டு மக்கள் நிம்மதியற்றவர்களாக வாழுகின்றபோது இந்த நாட்டின் அரசாங்கம் ஆழ்ந்த உறக்கத்தில் குறட்டை விடுகிறது எனில், ரூபாயின் பெறுமதி எவ்வளவு உயர்ந்தாலும் யாரும் எதுவும் செய்ய முடியாதென்பதே யதார்த்தம்.

# அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்த முயற்சித்தால் நாட்டில் இரத்தக்களரி ஏற்படும்

## எதிர்க்கட்சி பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல

(கொழும்பு)

மக்கள் ஆணையின்றி அரச நிறுவனங்களை தனியார் மயப்படுத்த முயற்சித்தால் நாட்டில் இரத்தக்களரி ஏற்படும் நிலைமையே உருவாகும். அதனால் தேர்தலை நடத்தி மக்கள் ஆணையைப் பெற்றுக்கொள்ளுங்கள் என எதிர்க்கட்சி பிரதமகொறடா லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சர்வஜன வாக்குரிமை தொடர்பான இரண்டாம் நாள் சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

தேர்தலுக்கு அஞ்சும் அரசாங்கம், அதனை தடுப்பதற்காக பல்வேறு தந்திரங்களை மேற்கொள்கிறது. இந்நிலையில் வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக ஒதுக்கப்பட்டுள்ள நிதியை விநியோகிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. இதன்படி ஏப்ரல் 25 ஆம் திகதி தேர்தலை நடத்த தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

தற்போது சர்வதேச நாணய நிதியத்திற்கு தாமதித்தாவது அரசாங்கம் சென்றுள்ளது. இதன்போது 15 விடயங்களுக்கு இணங்கியுள்ளதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். அந்த 15 விடயங்களும் என்ன என்று தெரியவில்லை என்றார். (ம-7)

# அரசியல் விரோதமே முதல்வர் தெரிவு நிராகரிப்பு

## சிறீதரன் எம்.பி தெரிவிப்பு

70 வருட வரலாற்றைக் கொண்ட தமிழரசு கட்சியின் மாநகர சபை முதல்வர் வேட்பாளரை அரசியல் விரோதங்களும், குரோதங்களும் பழிவாங்கும் எண்ணமும் தான் ஏனைய கட்சியினர் நிராகரிப்பதற்குக் காரணம் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாநகர சபையின் இடைக்கால முதல்வர் தெரிவு கோரமின்மையால் ஒத்திவைக்கப்பட்டமை தொடர்பில் ஊடகவியலாளர் ஒருவர் அவரை வினவிய நிலையில், அது குறித்து கருத்துரைக்கும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், குறிப்பாக மாநகர சபையில் மக்கள் எமக்குப் பெரும்பான்மையினை வழங்கத் தவறிவிட்டார்கள். அதைவிட எதிர்வரும் காலத்தில் யாழ். மாநகர சபையில் 25க்கும் மேற்பட்ட ஆசனத்தைப் பெற்று யாழ் மாநகர சபையினை பூரணமாகக் கைப்பற்றுவோம் என்ற நம்பிக்கை எமக்குள்ளது அதற்குரிய ஆணையை மக்கள் வழங்குவார்கள் என நம்பிக்கையுடன் தெரிவிக்க விரும்புகின்றோம்.

எதிர்வரும் தேர்தலில் மாநகர சபையைத் தமிழரசு கட்சி பூரணமாகக் கைப்பற்றும் ஏன்பதில் எந்தவிதமாற்று கருத்துக்கும் இடமில்லை மக்கள் எங்களுடன் தான் உள்ளார்கள் ஓரிருவர் கூறும் வார்த்தைகள் நியமாகிவிட முடியாது. எதிர்காலத்தில் மாநகர சபையினை தமிழரசு கட்சிகைப் பற்றும் என்பதில் ஐயமில்லை.

மக்களை ஏமாற்றி மாதச் சம்பளத்தைப் பெறுவதற்காக பின் வாசலால் கையெழுத்திட்டு சபை அமர்வுக்குக் கலந்து கொள்ளாது ஏனைய கட்சிகளின் கதைகளைக் கேட்பதற்கு நாம் தயார் இல்லை என்றார்.

(ம-7,33,104)

## கிளிநொச்சியில் தொழிற் சந்தை

கிளிநொச்சி மாவட்டச் செயலக வளாகத்தில் பாரிய தொழிற் சந்தை நடத்தப்படவுள்ளது. எதிர்வரும் 22 ஆம் திகதி குறித்த தொழிற் சந்தை நடைபெறவுள்ளது.

இதற்கான முன்னாயத்த பணிகள் இடம் பெற்றதாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இளைஞர் யுவதிகளுக்கான உள்நாட்டு, வெளிநாட்டு தொழில் வாய்ப்புகளை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் இந்த தொழிற்சந்தை நடத்தப்படவுள்ளது. (ம-7)

## 'மகாராணி' நூல் வெளியீடு

லதா கந்தையா எழுதிய மகாராணி என்ற கவிதை நூல் வெளியிடானது இன்று சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் யாழ்ப்பாணம் YMCA மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. (ம-7)

## 8 மாவட்ட விவசாயிகளுக்கு இலவச யூரியா விநியோகம்

எட்டு மாவட்ட விவசாயிகளுக்கு யூரியா உரத்தை இலவசமாக வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை, பொலன்னறுவை, அநுராதபுரம், மொனராகலை, பதுளை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய பிரதேசங்களில் உள்ள குறைந்த வருமானம் பெறும் விவசாயிகளுக்கு சிறுபோக பருவத்திற்காக தலா ஒரு யூரியா உர மூட்டை வழங்கப்படும் என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கிடையில், 36,000 மெட்ரிக்தொன் டிஎஸ்பி (TSP) உரத்தை ஏற்றிய கப்பல் அடுத்தவாரம் நாட்டை வந்தடையவுள்ளது.

இந்தக் கப்பல் மார்ச் 17 ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தை வந்தடையவுள்ளது.

எதிர்வரும் காலங்களில் நெற்பயிர்ச் செய்கைக்கு அத்தியாவசியமான இரசாயன உரமான டிஎஸ்பி (TSP) உரத்தை விவசாயிகளுக்கு இலவசமாக வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார். (ம-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை **யாழ்.பிரதேசத்தில்** ஆவரங்கால் சந்தை, ஆவரங்கால் சிவன் கோவில், கலைமகள் சந்தி புத்தூர், மட்டுவில் வீதி புத்தூர், நாவற்காடு அச்சுவேலி, பெரிய பொக்கணை, புத்தூர், ஊறணி, வாதரவத்தை, வீரவாணி, காய்கறி சந்தை அருகில் மருத்துவமனை வீதி ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** ஸ்ரீ ரங்கன் அரிசி ஆலை, தெய்வேந்திரம் அரிசி ஆலை, குகன் நகர், மகாறம்பைக்குளம், சிதம்பரபுரம் ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** அந்தோனிப்பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல் மென் ஐஸ் தொழிற்சாலை, பெரிய கரைசல் பல்மெய்ரா ஹவுஸ், பல்மெய்ரா ஹவுஸ், தலைமன்னார், தலைமன்னார் வைத்திய சாலை, தலைமன்னாா கடற்படை முகாம், வங்காலைப்பாடு சென்ட் லார்ட்ஸ் ஐஸ் தொழிற்சாலை, நடுக்குடா, பேசாலை-ஐஸ் தொழிற்சாலை, Grotto of lady lourds church pesalai, கட்டுகாரங்குடியிருப்பு, கரைசல் திட்டம், கீழியங் குடியிருப்பு, குருசுபாடு கடற்படை முகாம், படப் பாடி நீர் வழங்கல், பருத்திப் பண்ணை, பாவிலுப்பட்டான் குடியிருப்பு, பெரியகரைசல் பேசாலை, சிலாவத்தை முகாம் சந்தி, சிறுதோப்பு, தலைமன்னார், தலைமன்னார் கப்பல் வீடமைப்புத் திட்டம், தலைமன்னார் புகையிரத நிலையம், துள்ளு குடியிருப்பு தும்பு தொழிற்சாலை, துள்ளு குடியிருப்பு திட்டம், வங்காலைப்பா ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுத்தமான குடிநீர் இன்றி கண்ணகி நகர் கிராம மக்கள்

(தருமபுரம்)

**கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட புன்னைநீராவி கிராம அலுவலர் பிரிவின் கீழ் உள்ள கண்ணகி நகர் எனும் கிராமத்தில் 93 ஆம் ஆண்டு தொடக்கம் 450 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வரும் நிலையில் நாளாந்த தேவைக்காக சுத்தமான தண்ணீர் பெற முடியாத நிலை காணப்படுவதாக கவலை தெரிவித்துள்ளனர்.**



அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

தமது பகுதிகளில் சுத்தமான தண்ணீர் பெறக்கூடிய வகையில் மூன்று கிணறுகளே உள்ளன. அதுவும், தனியார் காணியில் அமைந்துள்ளது.

தமது கிணறுகளில் உள்ள கிணற்று நீரை எந்த ஒரு தேவைக்கும் பயன்படுத்த முடியாத நிலையில் மஞ்சள் நிறமாக காட்சியளிக்கின்றது.

ஆடைகள் துவைக்கும் போது உடனே மஞ்சளாக மாறிவிடுகின்றது. இதன் காரணமாக பாடசாலை மாணவர்கள், சிறியவர்கள், முதியவர்கள் என பலரும் குளிப்பதற்கும் ஏனைய தேவைகளுக்கும் நீரை பெற வேண்டுமாயின் அருகில் உள்ள குளங்களுக்கு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் வயது முதிர்ந்தவர்கள் இந்த மஞ்சள் நீரினையே பருகியும் தமது நாளாந்த தேவைக்கு பயன்படுத்தி வருகின்றனர் இதன் காரணமாக சிலர் நோய் வாய்ப்பட்ட நிலையில் வைத்தியசாலைக்கு சென்ற பொழுது வைத்தியர்கள் சுத்தமான குடிநீரை பருக வேண்டும் என ஆலோசனை கூறியுள்ளனர்.

இருப்பினும் சுத்தமான குடிநீர் பெறுவது பெரும் சிரமமாக உள்ளதாகவும் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் எமது பகுதிக்கு கிராம சேவையாளர் ஊடாக நீர் சுத்திகரிப்பு இயந்திரம் ஒன்று வழங்கப்பட்டது.

வழங்கப்பட்ட நீர் சுத்திகரிப்பு இயந்திரம் இன்று வரை பயன்படுத்த முடியாத நிலையில் கிடையில் போடப்பட்டுள்ளது.

சுத்திகரிப்பு இயந்திரத்தை பொருத்துவதற்கான தளம் அமைக்கப்பட்டுள்ளது.

ஏனைய எந்த செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படாத நிலையில் சுத்திகரிப்பு இயந்திரம் இருந்தும் சுத்தமான நீரை பெற முடியாத நிலை இருப்பதாக கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே இது தொடர்பாக சம்பந்தப்பட்ட உரிய அதிகாரிகள் எமது பகுதிக்கு சுத்தமான குடிநீரை பெற்று ஒரு நிரந்தர தீர்வினை பெற்றுத்தர வேண்டுமென தெரிவித்துள்ளனர். (4-6-316)

# ப.நோ.கூ.சங்க நிலையம் அமைத்துத் தாருங்கள்

## ஓமந்தை வீட்டுத்திட்ட மக்கள் கோரிக்கை

(நெளுக்குளம்)

வவுனியா ஓமந்தை அரச ஊழியர்கள் வீட்டுத் திட்டம் பகுதியில் 250 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர்.

எனினும் அங்கு அத்தியாவசியமான உணவுப் பொருட்களைப் பெற்றுக்கொள்ள ஒரு கிலோமீற்றர் தூரம் சென்று ஓமந்தை பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக உள்ள வர்த்தக நிலையத்தில் அத்தியாவசியமான உணவுப் பொருட்களை கொள்வனவு செய்யவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் அப்பகுதியில் சென்று குடியேறுவதற்கு பலர் தயங்கி வருகின்றனர்.

எனவே மக்கள் குடியிருக்கும் பொருத்தமான பகுதி ஒன்றில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கோப் சிட்டி நிலையம் ஒன்றினை அமைத்து அங்கு வசித்து வருபவர்களின் நன்மை கருதி இந்நிலையத்தை அமைக்க நடவடிக்கை எடுக்குமாறு அங்கு வசித்து வரும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-6-299)

# வீடு புகுந்து திருட்டு மூவர் பொலிஸாரால் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கெருடாவில் பகுதியில் திருடப்பட்ட வீட்டுத் தளபாடங்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் சாவகச்சேரிப் பொலிஸாரால் மீட்கப்பட்டிருப்பதுடன்- சம்பவத்துடன் தொடர்புடைய மூவரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வீட்டில் ஆட்கள் இல்லாத நிலையில் சுமார் 4 இலட்சம் ரூபாய் பெறுமதியான வீட்டுத் தளபாடங்கள் களவு போயிருப்பதாக சாவகச்சேரிப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் இணுவில் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து களவாடப்பட்ட பொருட்களை பொலிஸார் மீட்டுள்ளனர்.

இதன்போது சோபா செற்றிகள், மின் விசிறிகள்,வீட்டுத் தளபாடங்கள் உள்ளிட்ட 4 இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் மீட்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6-30)



# டைனமைட் வெடிபொருட்களுடன் மன்னாரில் இருவர் கைது

(மன்னார்)

மன்னார் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பள்ளிமுனை கடற்கரை பகுதியில் வைத்து ஒரு தொகுதி "டைனமைட்" வெடிபொருட்களுடன் 2 சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் வியாழக்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் பிரகாரம் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் உத்தியோகத்தர்கள் 200 "டைனமைட்", அதற்கு பயன்படும் 160 அடி நூல் மற்றும் ஏற்றி வைத்து இருந்த பட்டா வாகனம் என்பவற்றை கைப்பற்றியதுடன் சந்தேக நபர்கள் இருவரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் நாரம்பன பகுதியை சேர்ந்த 35, 54 வயதுடையவர்கள் என தெரிய வந்துள்ளது.

மேற்படி கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மற்றும் கைப்பற்றப்பட்ட பொருட்கள் மேலதிக விசாரணையின் பின் மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளது. (4-6-285)

# ஆபத்தான வெடிபொருட்களை அகற்றுமாறு கோரிக்கை




(கண்டாவளை)

கிளிநொச்சி ஆனையிறவு பகுதியில் ஆபத்தான நிலையில் பெருந்தொகையான எறிகணைகள் உள்ளிட்ட வெடிபொருட்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

கிளிநொச்சி ஏ-9 வீதிக்கு அண்மித்த ஆனையிறவுப் பகுதியில் அதாவது தற்போது வணிக சுற்றுலா மையம் அமைந்துள்ள வளாகத்தில் குறித்த வெடிபொருட்கள் என்பன காணப்பட்டன.

இவ்வாறு ஆபத்தான நிலையில் காணப்படுகின்ற வெடி பொருட்களை பாதுகாப்பாக அகற்றுவதற்கு உரிய தரப்புகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதேச மக்கள் கோரியுள்ளனர். (4-6-315)

# ஓமந்தையில் கருங்கல் அகழ்வு அப்பகுதி மக்கள் கடும் எதிர்ப்பு

(நெளுக்குளம்)

வவுனியா ஓமந்தை கதிரவேலர் பூவரசங்குளம் பகுதியில் கருங்கல் அகழ்வதற்கு பொது மக்கள் எதிர்ப்பினை வெளியிட்டுள்ளனர். குறித்த பகுதியில் அமைந்துள்ள மலைக்குன்று ஒன்றில் கருங்கல் அகழ்வதற்கான அனுமதி தனிநபர் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

அதற்கு கிராம மக்கள் எதிர்ப்பு தெரிவிப்பதுடன் தாம் ஆலயமாக வழிபடும் இடத்தில் குறித்த செயற்பாட்டிற்கு வழங்கிய அனுமதியை உடன் நிறுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக கருத்து தெரிவித்த கிராம மக்கள். குறித்த மலையில் நாம் இறைவழிபாட்டில் ஈடுபட்டுவரும் நிலையில் அதனை பொருட்படுத்தாமல் கருங்கல் அகழ்வதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மலையில் உள்ள பிள்ளையார் சிலை சேதமாக்கப்பட்டுள்ளது. இதற்கு வன்மையான கண்டனங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்தப்பகுதியில் கருங்கல் அகழ்வதால் அருகில் உள்ள குளத்தின் நீர்மட்டமும் குறைவடையும் நிலை காணப்படுகின்றது.

எனவே குறித்த விடயங்களை கவனமெடுத்து வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தை இடைநிறுத்துமாறு அதிகாரிகளிடம் கேட்டுகொள்கின்றோம் என்றனர்.

சம்பவ இடத்திற்கு சென்ற வவுனியா பிரதேச செயலாளர் நா.கமலதாசன், மற்றும் பிரதேசசபையின் தவிசாளர் த.யோகராஜா ஆகியோர் பொது மக்களுடன் கலந்துரையாடியிருந்தனர்.

குறித்த இடத்தில் ஆலய வழிபாடு இடம்பெறுவது தொடர்பான தகவல்களை கேட்டறிந்த பிரதேச செயலாளர் இது தொடர்பாக தொல்பொருட் திணைக்களம் மற்றும் சுற்றுச்சூழல் அதிகாரசபைக்கு தெரியப்படுத்துவதாக தெரிவித்தார். (4-6-29

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வவுனியாவில்...

முன்தினம் இரவு வெட்டுக்காயங்களுடன் குறித்த இளைஞனின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

கழுத்து பகுதியில் வெட்டுக்காயங்களுடன் சடலம்காணப்படுவதாக பொதுமக்கள் பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு சென்ற பூவரசங்குளம் பொலிஸார் ஆரம்ப கட்ட விசாரணைகளை முன்னெடுத்த நிலையில் சந்தேகத்தின் பேரில் ஐவரைக் கைது செய்துள்ளனர். (ம-7,299)

## யாழில் 170...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண மாவட்டத்தில் எதிர்வரும் காலத்தில்பாணின் விலை மேலும் குறைக்கப்படும் சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன.

சடுதியாக இலங்கையில் ரூபாயின் பெறுமதி அதிகரித்து வருகின்றது.

தற்பொழுது கொழும்பில் பாணின் விலையினை பத்து ரூபாய் குறைக்கவுள்ளார்கள். அதற்கு நிகராக நாங்களும் யாழ்ப்பாண மாவட்டத்தில் ஒரு இறாத்தல் பாணின் விலையினை பத்து ரூபாய் குறைப்பதற்கு இணங்கியுள்ளோம்.

பாண் உற்பத்தியில் கொழும்பு மாவட்டத்துடன் எமது யாழ்ப்பாண மாவட்டத்தினை ஒப்பிட முடியாது.

தற்பொழுது 170 ரூபாய்க்கு தான் பாண் விற்க உள்ளோம். ஆனாலும் எதிர்வரும் காலங்களில் இதனைவிட மிகக் குறைவான விலைக்கு பாணை விற்க வேண்டிய நிலை ஏற்படும் என எதிர்பார்க்கின்றோம் என்றார். (ம-7)

## கோரமின்மை...

புதிய இடைக்கால முதல்வரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் நேற்றுக் காலை 10.00 மணிக்கு வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செ.பிரணவநாதன் தலைமையில் ஆரம்பமாகியது.

எனினும் கூட்டத்துக்குத் தேவையான நிறைவெண் இல்லாத காரணத்தால் கூட்டம் 10.30 மணிக்கு ஆரம்பமாகும் என்று உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மணிவண்ணன் தரப்பு உறுப்பினர்கள் சிலர் சபா மண்டபத்தினுள் வராமல், பார்வையாளர் பகுதியில் அமர்ந்திருந்தனர். ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் சபா மண்டபத்துக்கு வெளியே உறுப்பினர் அறையில் அமர்ந்திருந்தனர்.

உள்ளூராட்சி ஆணையாளர் அறிவித்தபடி மீண்டும் 10.30 மணிக்குக் கூட்டம் ஆரம்பமாகிய நேரத்தில் 19 உறுப்பினர்கள் மட்டுமே சபா மண்டபத்தினுள் பிரசன்னமாகியிருந்தனர்.

இந்நிலையில், கூட்டத்துக்கான நிறைவெண் இல்லாத காரணத்தால் நேற்றைய கூட்டம் ஒத்தி வைக்கப்படுவதாகவும் தெரிவுக்கான புதிய திகதி விரைவில் அறிவிக்கப்படும் என்றும் குறிப்பிட்ட வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் செ.பிரணவநாதன் கூட்டத்தை ஒத்திவைத்தார். (ம-7,33,104)

## கீரிமலை...

பாறைப்பகுதியில் ஆதிசிவன் கோயில் அமைந்திருந்தது. அச்சிவன் கோயில் தற்போது இல்லை என்று அங்கு போய் வந்த அன்பர்கள் ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார்கள்.

மேலும் பெருமைமிக்க பெண் சித்தரான சடையம்மா அவர்களின் சமாதி கோயில் மடம் அதற்கருகிலிருந்த சங்கர சுப்பையர் சுவாமிகளின் சமாதி, கதிரைவேலன் கோயில் இவற்றையும் காணவில்லை என்ற செய்தி சைவ மக்களுக்கு மிகவும் அதிர்ச்சியை தந்துள்ளது.

சுமார் 33ஆண்டுகளுக்குப் பின்பு ஆலயத்தை தரிசிக்கலாம் என்று சென்ற மக்களுக்கு பேரதிர்ச்சியை தந்தது. இவ்விடயம் தொடர்பாக ஜனாதிபதி மற்றும் அமைச்சரவை பதிலளிக்க வேண்டும்.

தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இவ்வாலயங்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அழிக்கப்பட்ட கோயில்கள் இருந்த இடத்தை சைவமக்களிடம் உடனடியாக ஒப்படைக்க வேண்டும். மீண்டும் அந்த இடங்களில் சைவமக்கள் கோயில்களைக் கட்டுவதற்கான அனுமதியை உடன் வழங்க வேண்டும்.

தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இவ்விடயம் தொடர்பாக உடன் குரல் கொடுக்க வேண்டும். வடக்கு மாகாண ஆளுநர் பொதுமக்கள் தங்கள் நிலங்களை [illegible] அங்கு ஏஞ்சி[illegible] தரிசிப்பதற்கும் உடன் ஒழுங்கு செய்ய வேண்டும் என்று வேண்டுகின்றோம் என குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

## தேர்தலை...

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதில் காணப்படும் தடைகள் தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடி இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன.

அதற்கமைய குறிப்பிட்ட காலத்திற்குள் வாக்குசீட்டுக்களை வழங்குவதற்கும், அரச அச்சகத்திற்கான பாதுகாப்பினை வழங்குவதற்கும் எரிபொருட்களை வழங்குவதற்கும் துறைசார் உயர் அதிகாரிகளால் உறுதியளிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்ட தீர்ப்பிற்கமைய, பிரதிவாதிகளாகப் பெயர் குறிப்பிடப்பட்டிருந்த தரப்பினரை தேர்தல் ஆணைக்குழுவிற்கு அழைத்து, திட்டமிட்ட தினத்தில் தேர்தலை நடத்துவதில் காணப்படும்தடைகளை நீக்குவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. அதற்கமைய அந்தக் கலந்துரையாடலில் குறித்த அரச நிறுவனங்களுடன் சில இணக்கப்பாடுகள் எட்டப்பட்டுள்ளன.

அதற்கமைய அரச அச்சகமா அதிபரினால் தபால்மூல வாக்கெடுப்பினை நடத்துவதற்கு தேவையான வாக்குச்சீட்டுக்களை 5 நாட்களுக்குள்ளும் ஏனைய வாக்கு சீட்டுக்களை 20 - 25 நாட்களுக்குள்ளும் அச்சிட்டு தேர்தல் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்க முடியும் என்றும், அதற்கு தேவையான நிதியை நீதிமன்ற தீர்ப்பிற்கமைய நிதி அமைச்சிடமிருந்து பெற்றுக் கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் வாக்குச்சீட்டுக்கள் அச்சிடப்படும்போது அரச அச்சகமா அதிபரினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைய தேவையான பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மற்றும் தேவையான தினம் தொடர்பான தகவல்களை பொலிஸ்மா அதிபருக்கு வழங்குமாறும், அற்கமைய தேவையான பாதுகாப்பினை வழங்க முடியும் என்று சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபரால் (தேர்தல்) அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழுவின் கோரிக்கைக்கு அமைய தேர்தலின்போது தேவையான எரிபொருளை வழங்குவது தொடர்பான தீர்மானத்தை மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் சிரேஷ்ட அதிகாரி மற்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அதிகாரிகளால் எதிர்வரும் சில தினங்களுக்குள் வழங்குவதற்கு இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம் தாவடியில் 5 பரப்பு காணி விற்பனைக்கு
● மூன்று பரப்பாகவும் இரண்டு பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
● KKS வீதியில் இருந்து இரண்டாவது காணி
● தாவடி சந்தியில் இருந்து 100 m தூரத்தில்
076 436 5814
(14863)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 10/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1510
வெற்றி இலக்கங்கள்
கும்பம் 3 7 9 1 0 3
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.03.10
சீட்டிழுப்பு இலக்கம் - 1085
H 06 48 49 62
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.03.10
சீட்டிழுப்பு இலக்கம் 3297
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
B 19 28 68 72
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 10/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1403
வெற்றி எழுத்து சுப்பர் இலக்கம் வெற்றி இலக்கங்கள்
N 03 12 15 18 22

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.03.10
சீட்டிழுப்பு இலக்கம் 364
வெற்றி இலக்கங்கள்
மீனம் 03 07 34 41 மீனம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/03/10
சீட்டிழுப்பு இலக்கம் 5055
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
A 6 5 6 4 3 9
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2030
நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.03.10
தினம் வெள்ளிக்கிழமை
Q 13 22 49 61
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,095,300/-
DLB

சனிதா
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.03.10
சீட்டிழுப்பு இல : 4191
வர்ணம் : செம்மஞ்சள்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,366,520/-
வெற்றி இலக்கங்கள்
02 09 43 74 I
DLB

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 298
சீட்டிழுப்பு திகதி 2023.03.10
வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
03 36 48
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,057,880/-
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,427,152/-
திகதி 2023-03-10
வெற்றி வாரம் 3742
வர்ணம் கரும் நீலம்
வெற்றி இலக்கங்கள்
18 27 51 54
9043
547
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 10,977,400/-
DLB

ஜய
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
I 35 39 48 52 73
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1206
வர்ணம் ஊதா
திகதி 2023.03.10
வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 312,297,932.20
DLB
தொலைபேசி 011-2 333 546-47
Web : www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1856
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி : 2023.03.10
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,592,020/-
வெற்றி இலக்கங்கள்
08 28 57 70 Z
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணமகன் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1997 அவிட்டம் 4ஆம் பாதம் செவ்வாய் 4இல் அரச தொழில் செய்யும் விவாகரத்தான மணமகளுக்கு வெளிநாடு அல்லது உள்நாட்டு மணமகன் தேவை.

தொடர்பு :
**077 367 1062**

(14841)

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் பிரபல சிகை அலங்கரிப்பு நிலையத்திற்கு முடிவெட்டுவதற்கு ஆண் வேலையாட்கள் தேவை. சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்பு : **076 759 3357**
**076 768 5395**

(14855)

## கணக்காளர் தேவை

யாழ். நகரை தலைமை அலுவலகமாக்க் கொண்ட எமது கணக்காளர் நிறுவனத்தின் கொழும்பு கிளைக்கு கணக்காளர் தேவை. கணக்கியல் அறிவும், கணனி பற்றிய அறிவும் கொண்ட 28 - 45 வயதுக்குட்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம்.

மின்னஞ்சல் : accntjaffna@gmail.com
தொலை பேசி எண் : 077 945 0668

(14854)

## வேலையாட்கள் தேவை

எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு அனுபவமுள்ள மேசன், கூலியாள், பெயின்ரர் தேவை.

தொடர்பு :
**075 132 6502**
**077 125 4416**

(C-6138)

CCTV கமராக்கள் பொருத்துதல், பழுது பார்த்தல் உத்தரவாதத்துடன் செய்து தரப்படும்.

(14858)

**V Vision Security Solutions**
**077 998 6772**

## வாடகைக்கு உண்டு

யாழ் திருநெல்வேலி பரமேஸ்வரா சந்தியில் பல்கலைக்கழகத்திற்கு மிக அண்மையில் உள்ள எமது கட்டிடத்தில் குளியல் அறையுடன் சமையல் வசதி கொண்ட அறைகள் வாடகைக்கு உண்டு.

தொடர்பு :
**077 945 0668**

(14854)

## பணியாளர்கள் தேவை

கம்பனி முகவர் நிலையத்திற்கு விற்பனை பிரதிநிதிகள், கணக்காளர் ஆண் / பெண் பணியாளர்கள் ஆண் / பெண் முன் அனுபவம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும் **076 315 6470**

(C-6128)

## யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

### பாடசாலை பொறுப்பேற்காது

யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை என்ற பெயரைப் பயன்படுத்தி Unite Together நிகழ்வொன்று தொடர்பாக அனுப்புவர் யாரென்று குறிப்பிடப்படாத யாராலும் ஒப்பமிடப்படாத கடிதம் ஒன்று தபாலில் அனுப்பப்பட்டு வருவதாக அறிய முடிகிறது. அக் கடிதத்திற்கும் பாடசாலைக்கும் எந்தவித தொடர்பும் இல்லை அதில் குறிப்பிடப்பட்டிருப்பது போன்று 12.03.2023 ஆம் திகதி விசேட கூட்டம் எதுவும் பாடசாலையினால் ஒழுங்கு படுத்தப்படவில்லை.

2008 Construction (யாப்பு) எனக் குறிப்பிடப்படும் எந்த பழைய மாணவர் சங்க யாப்பும் பாடசாலையினாலோ கல்வியமைச்சினாலோ அங்கீகரிக்கப்பட்டதல்ல என்பதனை தெரிவித்துக்கொள்கின்றேன்.

தகவல் திருமதி இராஜினிதேவி முத்துக்குமாரன்
அதிபர்
யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை

(C-6136)

## காணி விற்பனைக்கு

### யாழ்ப்பாணம் புத்தூரில் 82 பரப்பு காணி விற்பனைக்கு

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து 1 1/2 KM
- குடியிருப்புக்கள் சூழ உள்ள காணி
- புத்தூர் - சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியில் இருந்து 500 M தூரத்தில் நன்னீர் ஊற்று நிலம்
- விவசாயம் செய்யவும் வீடு கட்டவும் உகந்த காணி
- ஒரு பரப்பின் விலை ஒரு இலட்சத்து இருபதாயிரம் ரூபாய் மட்டும்
- 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்

(14837)

**074 318 7263 | 076 755 8606 | 076 436 5814**

## கொழும்பு விலையில் யாழ்ப்பாணத்தில்

### 30% விலைக்கழிவில்



- அழகுசாதன பொருட்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- விளையாட்டுப் பொருட்கள்
- கவரிங் நகைகள்
- சோடினை சாமான்கள்
- பாடசாலை உபகரணங்கள்
- மணிக்கூட்டு வகைகள்
- கிறீம் வகைகள்
- பிளாஸ்ரிக் பொருட்கள்
- பாட்டா வகைகள்
- தையல் உபகரணங்கள்
- சில்வர், மாபிள், கிளாஸ் வகைகள்

என்பன கொழும்பு விலையில் விற்பனைக்கு உண்டு.

(14846)

## சரவணபவன் பென்சி கவுஸ்

இல.26/1,
ஜும்மா பள்ளிவாசல் வீதி, யாழ்ப்பாணம்

உரிமையாளர்
தே.கலைத்தாசன்(கரன்)
077 468 3354

## தொடுவானம் செயற் குழுமத்தின் அனுசரணையுடன் ஸ்கந்தா விளையாட்டுக் கழகம் நடாத்தும்

### தேடும் உறவு ஜெ.ரவிக்காந்தன் வெற்றிக் கிண்ணத்துக்கான மாபெரும் மென்பந்தாட்ட சுற்றுப்போட்டி - 2023

**25.03.2023 சனிக்கிழமை முதல் ஆரம்பமாகின்றது**

6 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட விலகல் முறையிலான போட்டி

**போட்டிகள் வார நாட்களில் சனி மற்றும் ஞாயிறு தினங்களில் மட்டும் நடாத்தப்படும்**

**1 ஆம் பரிசு ரூபா 100,000**
**2 ஆம் பரிசு ரூபா 50,000**

மேலும் பல சாதனைப் பரிசில்கள், வெற்றிக் கேடயங்களுடன்

பதிவுகளுக்கு முந்துங்கள்

தொடர்புகளுக்கு
077 305 1538
077 084 0694
077 818 3880
077 081 1010

ஸ்கந்தா விளையாட்டுக் கழகம்
ஸ்கந்தபுரம், கிளிநொச்சி.

(14859)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.